


09.09.2024

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா - ஐக்கிய அரபு அமீரக நாடுகளுக்கிடையே பிரதிநிதி நிலையிலான பேச்சுவார்த்தைகள் பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்று வருகிறது.

2. சரக்கு சேவை வரி குழுமத்தின் 54ஆவது கூட்டம் புதுதில்லியில் இன்று காலை தொடங்கியது.

3. இலங்கை வசமுள்ள தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க தூதரக அளவிலான முயற்சிகளை மேற்கொள்ள முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வெளியுறவு அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

4. தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவிக்குழுவிற்கு இந்தாண்டு 35 ஆயிரம் கோடி ரூபாய் வங்கி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாநில இளைஞர்நலத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா தற்போது ஜப்பானை எதிர்கொண்டுள்ளது.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

பிரதமர்

இந்தியா - ஐக்கிய அரபு அமீரக நாடுகளுக்கிடையிலான இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பிரதமர் திரு.நரேந்திரமோடி - அபுதாபி இளவரசர் ஷேக் கலீத் பின் மொஹமத் பின் சையத் அல் நஹ்யான் உடன் புதுதில்லியில் இன்று பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம், கல்வி, கலாச்சாரம், உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நட்புறவை வலுப்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் இதில் இடம்பெறுகிறது.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவையும் அவர் சந்தித்து பேச உள்ளார்.

நாளை மும்பையில் நடைபெறும் வர்த்தக கூட்டமைப்பு நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்கிறார்.

இந்தியா ஐக்கிய அரபு அமீரக நாடுகளுக்கிடையிலான தூதரக நட்புறவு வலுவடைந்து வரும் நிலையில் இந்த பேச்சுவார்த்தைகள் முக்கியத்துவம் பெறுகிறது.

இளவரசரின் இந்திய வருகை புதிய வாய்ப்புகளுக்கான கதவுகளை திறப்பதோடு, வர்த்தக நடைமுறைகளும் மேலும் விரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

சரக்கு சேவை வரி

சரக்கு சேவை வரி குழுமத்தின் 54ஆவது கூட்டம் புதுதில்லியில் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் இன்று நடைபெற்று வருகிறது..

நிதித்துறை இணை அமைச்சர்கள் திரு.பங்கஜ் சவுத்ரி மற்றும் மாநில நிதியமைச்சர்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.

காப்பீட்டு தொகை மீதான வரி விதிப்பு, ஆன்லைன் விளையாட்டு மீதான சரக்கு சேவை வரி ஆகியவை குறித்து இன்றைய கூட்டத்தில் விவாதிக்கப்படுவதாக தெரிகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

அபூர்வ சந்திரா

நாட்டின் சுகாதார கட்டமைப்பு மனிதவள ஆதாரங்கள் தொடர்பான 2022-23 ஆம் ஆண்டிற்கான தரவுகளை மத்திய சுகாதார செயலர் திரு.அபூர்வ சந்திரா இன்று புதுதில்லியில் வெளியிட்டார்.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31ஆம் தேதி வரையிலான சுகாதார கட்டமைப்பு திட்டங்கள், மனிதவள ஆதாரங்கள் தொடர்பான தகவல்கள் விரிவாக வெளியிடப்படுவது வழக்கம்.

திட்டமிடல், கண்காணிப்பு, சுகாதார கட்டமைப்பு மேலாண்மை போன்றவற்றிற்கு இத்தரவுகள் முக்கிய பங்காற்றுகின்றன.

இந்நிகழ்ச்சியில் பேசிய சுகாதார செயலர் திரு.அபூர்வ சந்திரா, இத்தரவுகள் துல்லியமானவையாக இருப்பதால், தேசிய சுகாதார இயக்கத்திற்கு இது பெரிதும் பயனளிக்கும் என்றார்.

இத்தரவுகள் மாநிலங்களின் தேவை, உயர்முன்னுரிமைக்கான பகுதிகளை கண்டறிந்து அதற்கேற்ற வகையில் கொள்கைகளை வகுத்து இலக்குகளை நிர்ணயிக்க உதவுவதாக அவர் குறிப்பிட்டார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர் கடிதம்

இலங்கை வசமுள்ள தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்க மத்திய அரசை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், கடந்த 7ஆம் தேதி புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த 14 மீனவர்களும், 3 விசை படகுகளும் சிறை பிடிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 350 மீனவர்களும்,

49 மீன்பிடி படகுகளும் இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டிருப்பதாக கூறிய முதலமைச்சர் கடந்த 6 ஆண்டுகளில் இது மிக அதிகம் என்று கவலை தெரிவித்துள்ளார்.

இலங்கை நீதிமன்றங்கள் மீனவர்களின் சக்திக்கு மீறிய அபராதங்களை விதித்து வருவதாக கூறிய முதலமைச்சர் இதனால் மீனவ குடும்பங்கள் பாதிக்கப்படுவதாக எடுத்துரைத்தார்.

எனவே மீனவர்களையும், மீன்பிடி படகுகளையும் விடுவிக்க உறுதியான தூதரக அளவிலான முயற்சிகளை மேற்கொள்வதோடு, அபராத தொகையை தள்ளுபடி செய்யவும், கூட்டு பணிக்குழு கூட்டத்தை விரைந்து நடத்திடவும் வெளியுறவுத்துறை அமைச்சர் தலையிட்டு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் கோரியுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஆளுநர்

கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகத்தில் 44 ஆவது பட்டமளிப்பு விழா பல்கலைகழக வேந்தரும், தமிழக ஆளுநருமான திரு.ஆர்.என்.ரவி தலைமையில் இன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றிய மத்திய உழவர் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தலைவர் டாக்டர் திரிலோட்சன் மகாபத்ரா கடந்த 14 ஆண்டுகளில் பருவநிலைகளை எதிர்கொள்ளும் வகையில் 150 உயிரி செறிவூட்டப்பட்ட பயிர் ரகங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

நாட்டின் வேளாண் வளர்ச்சி 4 சதவிகிதமாக இருந்தால் மட்டுமே 2047 ஆம் ஆண்டு 35 ட்ரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை நாம் எட்ட முடியும் என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் 9 ஆயிரத்து 526 மாணவர்கள் இளம் அறிவியல், முதுநிலை பட்ட மேற்படிப்பு மற்றும் முனைவர் பிரிவில் பட்டம் பெற்றனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

காவிரி ஒழுங்காற்று குழு கூட்டம்

காவிரி நீர் ஒழுங்காற்று குழு கூட்டம் வரும் 12ஆம் தேதி புதுதில்லியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, புதுச்சேரி, மாநிலங்களின் உயர் அதிகாரிகள் பங்கேற்க உள்ளனர்.

வரும் அக்டோபர் மாதத்திற்கான 20 டி.எம்.சி தண்ணீரை விடுவிப்பது குறித்து இதில் வலியுறுத்தப்படும் என தெரிகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

உதயநிதி ஸ்டாலின்

தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவிக்குழுவிற்கு இந்தாண்டு 35 ஆயிரம் கோடி ரூபாய் வங்கி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாநில இளைஞர்நலத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மதுரையில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நல திட்ட உதவிகளை 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு இன்று வழங்கி பேசிய அவர் மகளிர் முன்னேற்றம் கல்வி சுகாதாரம் உள்ளிட்ட 13 துறைகளில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்றார்.

மதுரை மாவட்டத்தில் 12 ஆயிரத்து 300 பேருக்கு வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வாய்ஸ்

முன்னதாக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையை இன்று ஆய்வு செய்த அமைச்சர் மருத்துவமனையில் அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கே.என்.நேரு – பிரதீப்குமார்

திருச்சியில் மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு வங்கி கடன் இணைப்பு ஆணைகளை இன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் இம்மாவட்டத்தில் 14 ஆயிரம் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு தொழில் மேம்பாட்டு கடன் வழங்கப்பட உள்ளதாக கூறினார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

துரைமுருகன்

தமிழக அரசு பெண் கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருவதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுகன் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம் காட்பாடியில் 600 மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு 66 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான வங்கி கடனை இன்று வழங்கி பேசிய அவர், மாநிலத்தில் பெண்கள் நலனிற்கான பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக கூறினார்.

நாடாளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் மகளிருக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

மா.சுப்பிரமணியன்

தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் கட்டுக்குள் இருப்பதாக மாநில மருத்துவ மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மாநிலத்தில் முக்கிய நகரங்களில் குரங்கம்மை நோய் சிகிச்சைக்காக தலா 10 படுக்கைகள் கொண்ட சிறப்பு பிரிவு மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

தமிழகத்தில் குரங்கம்மை நோய் பரிசோதனை ஆய்வகம் சென்னை கிண்டியில் அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

பன்னாட்டு விமான நிலையங்களில் குரங்கம்மை நோய் பரிசோதனைகள் தொடர்ந்து நடைபெறுவதாக அமைச்சர் கூறினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

பொன்முடி

தமிழகத்தின் உயர்கல்வியின் தரம் சிறப்பாக உள்ளதால் கல்வி அறிவும் வளர்ச்சி பெற்றிருப்பதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.க.பொன்முடி தெரிவித்துள்ளார்.

விழுப்புரத்தில் ஒருகோடியே 69 லட்ச ரூபாய் மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகளை பள்ளி மாணாக்கருக்கு இன்று வழங்கி பேசிய அவர் தற்போது உயர்கல்வியில் தமிழ் வழி கல்வி கொண்டு வரப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

எஸ்.எஸ்.சிவசங்கர்

அரியலூர் அருள்மிகு கோதண்டராமசுவாமி கோவில் தேரோட்டம் அடுத்த ஆண்டு நடைபெறும் என்று மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

அரியலூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் 88 ஆண்டுகளுக்கு பின்னர் நடைபெற உள்ள இந்த தேரோட்டத்திற்கான திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கயல்விழி செல்வராஜ்

தமிழ்நாட்டில் ஆதி திராவிட நல மாணவர் விடுதிகள் மற்றும் பள்ளி மாணாக்கரின் கல்வி வளர்ச்சி, பன்முக திறனை வெளிக்கொணரும் நடவடிக்கைகளை அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருவதாக மாநில ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 366 விடுதிகளின் பராமரிப்பு பணிகளை மாநில அரசு கடந்த 3 ஆண்டுகளில் மேற்கொண்டதாக சுட்டிக்காட்டினார்.

இதன் தொடர்ச்சியாக 520 ஆதி திராவிட நல விடுதிகள் தேர்வு செய்யப்பட்டு 100 கோடி ரூபாய் செலவில் பராமரிப்பு பணிகள் தாட்கோ மூலம் தொடங்கப்பட உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மதுரை, கோவை, திருச்சி, நீலகிரி போன்ற நகரங்களில் அனைத்து வசதிகளுடன் கூடிய முன்மாதிரி விடுதிகளின் கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

அதேபோல் இப்பிரிவு மாணாக்கருக்கான மாதாந்திர பல்வகை செலவின தொகை இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டு அவர்தம் வங்கி கணக்குகளில் நேரடியாக செலுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

மாணாக்கருக்கு வழங்கப்படும் உணவின் அளவையும், தரத்தையும் கண்காணிக்க தனியாக செயலி உருவாக்கப்பட்டுள்ளதாக கூறிய அவர் இதனை விடுதி மாணாக்கரே சரிபார்த்துக்கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

ஆதி திராவிடர் நலத்துறைக்கு ஒதுக்கப்படும் நிதியானது திருப்பி அனுப்பப்படுவதாக சட்டப்பேரவை எதிர்கட்சி தலைவர் கூறியிருப்பது தவறான செய்தி என்று தெரிவித்த அவர் சென்ற நிதியாண்டில் 97.6 சதவிகிதம் நிதி செலவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

<u>ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு</u>

எடப்பாடி

தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் நலத்துறை விடுதிகளில் அடிப்படை வசதிகளை மாநில அரசு முழுமையாக செய்து கொடுப்பதன் அவசியத்தை அஇஅதிமுக பொதுச்செயலர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

சேலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் பரந்தூர் விமான நிலைய பணிகள் தொடங்கிவிட்ட நிலையில் விவசாயிகளை அழைத்து பேசி அரசு சுமூக தீர்வு காண வேண்டும் என்று கூறினார்.

அரசு மருத்துவமனைகளில் நோயாளிகள் சரியாக கவனிக்கப்படவில்லை என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளதாக கூறிய அவர் அரசு குறைகளை சரிசெய்ய வேண்டும் என்றார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

சமயபுரம்

திருச்சி சமயபுரம் மாரியம்மன் திருக்கோவிலில் பக்தர்கள் காணிக்கையாக வழங்கிய தங்கத்தை தரம் பிரித்து அளவிடும் பணிகள் தொடங்கியுள்ளன.

பலத்த பாதுகாப்புடன் நடைபெறும் இப்பணியில் 25க்கும் மேற்பட்ட பொற்கொள்ளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

அரசு ஆணை கிடைத்த பின்னர் இத்தங்கம் மும்பை அரசு உருக்காலைக்கு கொண்டு செல்லப்பட்டு ரிசர்வ் வங்கியிடம் ஒப்படைக்கப்படும்.

இதற்கான தங்க பத்திரங்களை ரிசர்வ் வங்கி கோவிலுக்கு வழங்கி, அதன் வட்டி கோவில் வருவாயில் சேர்க்கப்பட உள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கோவில்

கன்னியாகுமரி சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலய சுவாமி திருக்கோவில் ஆவணி தேர் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

திருவேங்கட விண்ணவரம் பெருமாள் சுவாமிக்கான இந்த விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஹாக்கி

சீனாவின் ர்ரடரடுிரசை-இல் நடைபெறும் ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா தற்போது ஜப்பானை எதிர்கொண்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு